திருக்கோவில்வலயக்கல்விஅலுவலகம்நடாத்தும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2020

**01**

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

## மாதிரி வினாப்பத்திரம் - 01

சுட்டெண் : .............................

அறிவுறுத்தல்கள் :

- ❖ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. **பகுதி 1, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
- ❖ .பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- ❖ பகுதி **III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையள்த்தல் வேண்டும் வேண்டும்.

## பகுதி - I

☯ ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைக் கொண்டிருக்கும் தெரிவினைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** எரிரேயுள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

1. 1:50000 எனும் அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தில் முறையே 18cm x 12cm நீள அகலங்களை உடையதாக உள்ளது. இப்படம் 1:75000 என்னும் அளவுத்திட்டதிற்கேற்ப வரையப்படுகின்றது. இப் புதிய படத்தன் நீளம், அகலம் முறையே.
   (1) 12cm x 8cm (2) 9cm x 6cm (3) 36cm x 24cm (4) 6cm x 4cm (5) 6cm x 12cm (........)

2. மிகச் சிறய அளவுத்திட்டப் படமொன்றின் வகைக்குறிப் பின்னத்தினைச் சரியாகக் காட்டும் விடை எது?
   (1) 1:2000 (2) 1:5000 (3) 1:40000 (4) 1:200000 (5) 1:250000 (........)

3. பச்சைத் தரவு என்பது?
   (1) ஒருங்குபடுத்திய தரவுகள் (2) கூட்டமாக்கப்பட்ட தரவுகள் (3) ஒழுங்குபடுத்தப்படாத தரவுகள்
   (4) படமாக்கிய தரவுகள் (5) அட்டவணைப் படுத்திய தரவுகள் (........)

4. வரிசை ஒழுங்கில் அமைக்கப்பட்ட இலங்கங்களின் நடுப்பெறுமானம்.
   (1) ஆகாரம் (2) இடை (3) இடையம் (4) வீச்சு (5) மையப்போக்கு (........)

5. பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையானது ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மக்கள் பாவனைக்கு விடப்பட்ட ஆணடு.
   (1) 1980 (2) 1982 (3) 1892 (4) 1973 (5) 1975 (........)

6. இலங்கையிள் இடவிளக்கப் படமொன்றில் காட்டப்படும் நிலப்பயன்பாட்டம்சங்கள் முறையே.
   (1) திரிகோணகணித நிலையம், நீர்ப்பாசனக் கால்வாய், காற்றிடைவெளி, நெற்பயிர், குடியிருப்புக்கள்.
   (2) கட்டடங்கள், குடியிருப்புக்கள், சேனைப் பயிர்ச்செய்கை, வீதிகள், பற்றைக் காடுகள்.
   (3) நீர்பாசனக் கால்வாய், குளம், குளக்கட்டு, பிரதான வீதி, நெற்பயிர், தொடரலை நிலம்.
   (4) வெளியரும்புப் பாறை, பிறபயிர்கள், மியாந்தர் வளைவு, தேயிலைப் பயிர் , சிறுவீதிகள்.
   (5) இறப்பர் பயிர், சேற்றுநிலம். நெற்பயிர், அடர்காடு, கட்டடங்கள். (........)

7. எதிர்பார்க்கும் ஆய்வுக்குச் சொந்தமான அனைத்தும்.
   (1) மாதிரி எனப்படும். (2) வினாக்கொத்து எனப்படும். (3) குடித்தொகை எனப்படும்.
   (4) அளவை எனப்படும் (5) அவதானிப்பு எனப்படும். (........)

8. புவியின் அண்மைக்கால மாறுபாடுகளை படமாக்கல் செய்ய மிகப் பொருத்தமான படவரைகலை நுட்ப முறையாது.

(1) இடவிளக்கத் தேசப்படங்கள்.

(2) விமானஒளிப் படங்கள்

(3) செய்மதிப் படங்கள்

(4) தொலையுணர்வு தொழிநுட்ப முறைகள்

(5) புவியியல் தகவல் முறைமைப் படங்கள் (........)

9. ஒரு நாட்டின் சனத்தொகை வளர்ச்சிப் போக்கை வரைந்து காட்ட பொருத்தமான வரைபட முறை.

(1) கோட்டு வரைபடம் (2) வட்ட வரைபடம் (3) கூட்டு பார் வரைபடம்

(4) நிரல் வரைபடம் (5) மிரமிட் வரைபடம் (........)

10. புவியியர் இடநிலைப்படத்தல் முறைமையின் பிரதான பிரவுகள்.

(1) வன்பொருள் தொகுதி, மென்பொருள் தொகுதி, பயன்பாட்டாளர் பகுதி

(2) தரவுத் தொகுதி, கணினித் தொகுதி, அச்சிடல் தொகுதி

(3) கணினித் தொகுதி, மென்பொருள், பயன்பாட்டாளர் தொகுதி

(4) செய்மதித் தொகுதி, கணினித் தொகுதி, வன்பொருள் தொகுதி

(5) செய்மதித் தொகுதி, தரைக் கட்டுப்பாட்டு தொகுதி, பயன்பாட்டாளர் தொகுதி (........)

11. 25 எண்ணிக்கைக்கையைக் கொண்ட தரவுத்தொகுதியொன்றின் இடையம்.

(1) உயர்ந்தளவான மற்றும் இழிவளவான எண்ணிக்கையைக் கூட்டி இரண்டால் பிரித்து வருவது.

(2) 13 வது எண்ணிக்கையின் பெறுமானம்.

(3) 13 ஆம் 14 ஆம் எண்ணிக்கையைக் கூட்டி இரண்டால் பிரித்து வருவது.

(4) 12 வது எண்ணிக்கையின் பெறுமானம்.

(5) 12 வது 13 வது எண்ணிக்கைகளைக் கூட்டி இரண்டால் பிரித்து வருவது.. (........)

12. புவியியல் தகவல் ஒழுங்கு முறையில் மேற்படிவாக்க ஆய்வு முறை என்பது.

(1) வலயங்களாக வகுத்து ஆய்வு செய்வது.

(2) இடைச் செருகல் மூலம்ஆய்வு செய்வது.

(3) வெவ்வேறு தட்டு தகவல்களை பொருத்தி ஆய்வு செய்வது.

(4) பௌதிக அம்சங்களை ஆய்வு செய்வது.

(5) புவியின் மேற்பரப்பினை ஆய்வு செய்வது. (........)

13. பின்வருவனவற்றுள் தரவு வங்கிகளாக அமைபவை..

(1) இறுவட்டு, இணையம், நூல்கள், கணனித் தகவல்கள்.

(2) இணையம், நூல்கள், பச்சைத் தரவுகள், வினாக்கொத்து.

(3) நூல்கள், பத்திரிகை, கட்டுரை, விகாக்கொத்து

(4) இணையம், இநுவட்டு, வானொலி, தொலைபேசி

(5) கணினி, தொலைக்காட்சி, இசைத்தட்டு, வினாக்கொத்து (........)

14. ஒரு பிரதேசத்தின் உயரத்தினைக் காட்டுவதற்குப் பொருத்தமான படவரைகலை பின்வருவனவற்றுள் எது.

(1) கோட்டு நிரல் வரைபடம் (2) சமஉயரக் கோட்டுப் படம்

(3) இடக்கணியப் படம் (4) புள்ளிப் படங்கள்

(5) பாய்ச்சல் வரைபடங்கள் (........)

15. மீடிறன் பல்கோணி ஒன்றினை விபரிக்கும் மிகப் பொருத்தமான 4ற்றினைத் தெரிவு செய்க.

(1) ஒவ்வொரு வகுப்புத் தரினதும் மொத்தப் பெறுமானங்களைத் தருகின்றது.

(2) இழைவரைபொன்றின் ஒவ்வொரு பாரினதும் மத்திய புள்ளிகளை தொடுத்து வரையப்படுவது.

(3) ஒவ்வொரு வகுப்புத் தரவினதும திரட்டுப் பெறுமானங்களைத் தருகின்றது.

(4) இடையத்திலிருந்து ஏற்படும்ஒவ்வொரு தரவினதும் விலகளைக் காட்டுகின்றது.

(5) ஏறுவரிசை ஒழுங்கில் தரவுத் தொடர்களை ஒழுங்குபடுத்துகின்றது. (........)

16. பின்வருனவவற்றுள் ஒண்ட ஓடு பற்றிய கூற்றுக்களுள் சரியான கூற்று.
(1) அடர்த்தி கூடியதாகக் காணப்படல்
(2) அடர்த்தி குறைந்ததாகக் காணப்படல்
(3) கடினமானதும், சமநிலைபேணும் ஓடாகக் காணப்படல்
(4) அதிகபாகுத்தன்மைப் பொருட்கள் புவி மேற்பரப்பில் காணப்படல்
(5) மேற்பரப்பு வெப்பநிலை 1000C$^0$ ஆகக் காணப்படல் (........)

17. இலங்கையின் ஈரவலயத் தாழ்நிலப் பிரதேசத்தின் முனைப்பான அம்சம் எது?
(1) 2000 mm இற்கு அதிகமான வருடாந்த மழைவீழ்ச்சியைக் கொண்டுள்ளது.
.(2) வருடாந்த சராசரி வெப்பநிலை 20$^0$C ஆக உள்ளது.
(3) சூறாவளிகளிலிருந்து மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது.
(4) முகிலற்ற தெளிவான வானமாகக் காணப்படும்
(5) வரண்ட பருவம் நீண்டதாகக் காணப்படும். (........)

18. பின்வருவனவற்றுள் எந்தச்சோடி இலங்கையின் இருவகையான புல் நிலங்களை உள்ளடக்கியுள்ளது.
(1) நீர்த்தாழைகளும், பத்தனாக்களும்
(2) வில்லுகளும், உவர்சேற்று நிலப்புற்களும்
(3) உவர்சேற்று நிலப்புற்களும், நீர்த்தாழைகளும்
(4) வில்லும், பத்தனாக்களும்
(5) கண்டல்களும், புல்வெளிகளும். (........)

19. பின்வரும் நிலவுருவச் சோடிகளுள் எச்சோடி வெள்ளந்சமவெளியில் பொதுவாகக் காணப்படுகின்றது.
(1) பின்னடர்ச்சேறும், பனியெருத்தேரிகளும்
(2) பனியெருத்தேரிகளும், நீண்ட மணற்குன்றும்
(3) பனிக்கட்டியாற்றுப் படிவும், பின்னடர்ச்சேறும்
(4) உறுச்சிதுளைகளும், தீவுக் குன்றும்.
(5) கழிமுகமும், U வடிவப் பள்ளத்தாக்கும். (........)

20. பாறைத் தன்மையான கரையோரத்தில் அலையின் செயற்பாட்டினால் ஏற்படும் நிலவுருவம்.
(1) கடற் குவடு (2) தளத்திடைக்குன்று (3) மணல் மேடுகள்
(4) நுழைகழிகள் (5) கடற்கரை (........)

21. புவிநடுக்கம் மையங்கொண்ட பகுதியையும், புவிநடுக்கம் தாக்கும் தரைப்குதியையும் குறிப்பிடுவது.
(1) புவிநடுக்க மையம், புவிநடுக்க அலைவுப்பகுதி (2) பாதாளமையம், மென்மையம்
(3) குவிவுமையம், மேன்மையம் (4) மேன்மையம், குவிவுமையம்
(5) புவிநடுக்கமையம், மேன்மையம் (........)

22. பின்வரும் பாறைகளில் இரசாயன முறையில் உருவான அடையற்பாறை வகையைத் தெரிவு செய்க.
(1) மணல் (2) நிலக்கரி (3) பளிங்குக்கல்
(4) மாக்கல் (5) உருண்டைக் கற்றிரள் (........)

23. இலங்கையில் மத்திய சுற்றாடல் சபை நிறுவப்பட்ட ஆண்டு.
(1) 1980 (2) 1981 (3) 1972 (4) 1990 (5) 1989 (........)

24. பச்சைவீட்டு விளைவுகளை உண்டாக்கும் வாயுக்களை சரியாகத் தரும் விடைத் தொகுதி.
(1) காபனீரொட்சைட், மீதேன், கிரிப்தன்
(2) மீதேன்,, காபனீரொட்சைட், நைதரசன் ஒக்சைட்டு
(3) கிரிப்தன், காபன், மீதேன்
(4) ஒட்சிசன், மீதேன்,, காபனீரொட்சைட்
(5) காபனீரொட்சைட், நைதரசன் ஒக்சைட்டு, ஒட்சிசன் (........)

25. இலங்கையில் சூறாவளிகள் உருவாகும் காலம்.
(1) மே மாதம் முதல் யூன் மாதம் வரை (2) மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை
(3) நவம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை (4) ஆகஸ்ட் மாதம் முதல் யூன் மாதம் வரை
(5) மே மாதம் முதல் யூலை மாதம் வரை (........)

26. 2050 ஆம் ஆண்டளவில் உலகின் மொத்தக் குடித்டிதாகையில் நகரக் குடித்தொகையின் சதவீதம் யாது?
(1) 20% (2) 35% (3) 40% (4) 50% (5) 70% (........)

27. உலகிள் இரும்பு ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் நாடுகளின் ஒழுங்கு முறை யாது?
(1) சீனா, அவுஸ்திரேலியா, பிறேசில், இந்தியா, ரஷ்யா
(2) ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஈரான், சீனா, யப்பான்
(3) அவுஸ்திரேலியா, பிறேசில், தென்னாபிரிக்கா, கனடா, உக்ரேன்
(4) சீனா, இந்தியா, சிங்கப்பூர், ரஷ்யா, ஜேர்மனி
(5) யப்பான், சீனா, தென்கொரியா, இந்தியா, அவுஸ்திரேலியா (........)

28 கட்டடங்கள் நெருக்கமடைந்து காணப்படும் குடியிருப்பும், தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பெருமளவு காணப்படும் குடியிருப்புப் பாங்கு.
(1) சிதறிய குடியிருப்பு (2) கொத்தணிக் குடியிருப்பு
(3) திட்டமிட்ட குடியிருப்பு (4) வலய அமைப்புக் குடியிருப்பு
(5) நேர்கோட்டுக் குடியிருப்பு (........)

29. உலகில் குறைந்த நகரமயமாக்கமுடைய நாடுகள்.
(1) டுபகோ, புருண்டி (2) இலங்கை, தென் சூடான்
(3) நெபாளம், மலாவி (4) உருகுவே, மோல்ட்டோ
(5) உகண்டா, பெல்ஜியம் (........)

30. இலங்கையில் ஒரு மில்லியனுக்கு மேல் சனத்தொகை கொண்ட நான்கு மாவட்டங்கள்.
(1) கொழும்பு, கம்பஹா, குருநாகல், கண்டி
(2) மொனராகலை. அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு
(3) கொழும்பு, கம்பஹா, குருநாகல், அனுராதபுரம்
(4) கம்பஹா, குருநாகல், கண்டி, யாழ்ப்பாணம்
(5) குருநாகல், கண்டி, கொழும்பு, புத்தளம் (........)

31. தற்போது பாரிய அளவிலான சர்வதேச இடப்பெயர்வுப் போக்கு காணப்படுவது.
(1) மேற்கு ஐரோப்பாவிலிருந்து வட அமெரிக்காவுக்கு
(2) மேற்கு ஆபிரிக்காவிலிருந்து லத்தீன் அமெரிக்காவுக்கு
(3) வட ஆபிரிக்காவிலிருந்து தெற்கு ஐரோப்பாவிற்கு
(4) கிழக்கு ஆசியாவிலிருந்து வட அமெரிக்காவுக்கு
(5) தென் ஆசியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு (........)

32. இலங்கையில் மைக்கா வகைக் காரியப் படிவுகள் பரம்பிக் காணப்படும் மாவட்டங்கள்.
(1) கண்டி, பதுளை, மாத்தளை (2) கண்டி, கேகாலை, இரத்தினபுரி
(3) பதுளை, மொனராகல, நுவரெலியா (4) பொலன்னறுவை, குருநாகல், புத்தளம்
(5) கேகாலை, இரத்தினபுரி, குருநாகல் (........)

33. 1965 களில் இலங்கையில் இறிமுகப்படுத்தப்பட்ட பசுமைப் புரட்சியின் தாக்கம் அதிகளிவில் காணப்பட்ட பயிர்ச்செய்கை.
(1) பழங்கள் (2) காய்கறிகள் (3) நெல்
(4) தேயிலை (5) தென்னை (........)

34. 2016 ஆம் ஆண்டு உலக வங்கியின் புள்ளிவிபரங்களின் படி சாதாரண வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் அதிகளவில் காணப்படும் நாடு.
(1) தென் சகாரா (2) சூடான் (3) இந்தியா
(4) சோமாலியா (5) எதியோப்பியா (........)

35. இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் மூன்று அமைவிடங்களைக் காட்டும் விடைத் தொகுதி.
(1) கட்டுநாயக்கா, அவிசாவளை மற்றும் பியகம
(2) பியகம, கட்டுநாயக்க மற்றும் ஹொரணை
(3) எக்கல, அவிசாவளை மற்றும் ஹொரணை
(4) அவிசாவளை, பியகம மற்றும் ஹொரணை
(5) கட்டுநாயக்க, கொக்கல மற்றும் பியகம (........)

36. தென்னாசியாவில் சார்பளவில் குடித்தொகை குறிகாட்டி சிறப்பாகக் காணப்படும் இரண்டு நாடுகள்.
(1) இந்தியா, பாகிஸ்தான் (2) இலங்கை, மாலைதீவு
(3) பூட்டான், நேபாளம் (4) பாகிஸ்தான், வங்காளதேஷ்
(5) இலங்கை, பங்காளதேஷ் (........)

37. 14 வயதுக்குக் கீழும் 65 வயதுக்கு மேலும் உள்ள வயதுப்பிரிவினரின் மொத்த சனத்தொகை 15 - 64 வயதுப் பிரிவினரின் சனத்தொகையினால் பிரிக்கப்படுவதினை எவ்வாறு வரையறை செய்யலாம்.
(1) சிறுவர் தங்கிவாழ்தல் விகிதம் (2) தங்கிவாழ்தல் விகிதம்
(3) வயது வந்தோர் தங்கிவாழ்தல் விகிதம் (4) சிறுவர் வயதுவந்தோர் விகிதம்
(5) வயது பால் விகிதம் (........)

38 இலங்கையின் அரச துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்பொருள் அங்காடிகளில் (Super Markets) ஒன்று.
(1) கார்கீல்ஸ் (2) கீல்ஸ் (3) ஆர்பிகோ
(4) சதொச (5) தம்புள்ளை (........)

39. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் தொடர்புபடுத்தும் கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் காரணிகளில் ஒன்று.
(1) முதல் (2) மூலதனம் (3) போக்குவரத்து
(4) அரச கொள்கை (5) சந்தை (........)

40. இலங்கையில் தற்போது அதிகளவு நிலம் பயன்படுத்தப்படும் பயிர்வகை எது?
(1) சிறு ஏற்றுமதிப் பயிர் (2) பெருந்தோட்டப் பயிர் (3) காட்டுப் பயிர்
(4) நெற்பயிர் (5) தெங்குப் பயிர் (........)

திருக்கோவில்வலயக்கல்விஅலுவலகம்நடாத்தும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2020

# 01

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

## மாதிரி வினாப்பத்திரம் - 01

அறிவுறுத்தல்கள்

✠ பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
✠ பகுதி **III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
✠ இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் *1: 50000* அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப்படமும், வரைபுத்தாள் ஒன்றும் வழங்கப்படும்.

### பகுதி - II

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட *1:50000* அளவுத்திட்டத்திலமைந்த ஹிங்கிரான்கெத்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி *20* மீற்றர்களால் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

> குறிப்பு :
> ✠ **படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.**
> ✠ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உப பிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
> ✠ உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) சதுரம் **E** இல் காணப்படும் சேவை நிலையம் **ஒன்றினையும்,** வழிபாட்டுத்தலம் **ஒன்றினையும்** பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) உமக்குத் தரப்பட்டுள்ள பிரதேசத்தில் காணப்படும் போக்குவரத்து வீதிகள் **நான்கினைப்** பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) உமக்குத் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தின் பரப்பளவினை சதுரகிலோ மீற்றரில் தருக? *(01 புள்ளி)*

(iv) இப்பிரதேசத்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் **இரண்டினைப்** பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(v) ***1: 25000*** என்ற அளவுத்திட்டத்திற்குரிய நேர்கோட்டு அளவுத்திட்டத்தினை வரைக. *(02 புள்ளிகள்)*

(vi) உமக்குத் தரப்பட்டுள்ள பிரதேசத்தின் வடிகால்பாங்கு தொடர்பாக **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(vii) உமக்குத் தரப்பட்ட படப் பிரதேசத்தின் தரைத்தோற்றத்திற்கும் மனித நடவடிக்கைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பினை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில், வழமையான குறியீடுகளையும் நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் **குறித்துப் பெயரிடுக.**

(i) பீரிங் நீரிணை (ii) அமேசன் நதி (iii) பம்பாஸ் புல்வெளி
(iv) அபிசீனியன் மேட்டு நிலம் (v) மொசாம்பிக் நீரோட்டம் (vi) காப்பன்டேரி குடா
(vii) உலகின் மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடு.
(viii) உலகில் மிகவும் உயரத்தில் அமைந்துள்ள ஏரி.
(ix) உலகின் மிக ஆழமான கடல் அகழி.
(x) சார்க் அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள நகரம். *(10 புள்ளிகள்)*

## பகுதி - III

3. (i) பாய்ச்சல் வரைபடங்கள் என்றால் என்ன? (02 Gs ṣ ṕ s ;)

(ii) பாய்ச்சல் வரைபடங்களின் நன்மை **ஒன்றினையும்,** தீமை **ஒன்றினையும்** குறிப்பிடுக? *(02 புள்ளிகள்)*

(iii) மையநாட்ட அளவைகளின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக? *(05 புள்ளிகள்)*

(iv) பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிக்குச்** சிறுகுறிப்பு எழுதுக?

(a) தொடர்ச்சியான தரவு (b) திறள் மீடிறன்
(c) பண்புசார் தரவுகள் (d) வரவுக்குறி *(06 புள்ளிகள்)*

4. (i) இடவிளக்கவியல் படத்துக்கும் கருப்பொருட் படங்களுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) இடவிளக்கப் படங்களின் தனித்துவமான முக்கியத்துவம் **இரண்டினைக்** குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) படமாக்களில் நவீன தொழிநுட்ப முறைகளின் **இரண்டு** பயன்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) புவியியல் தகவல் தொடர்பாடலில் செய்முறைப் புவியியல் நுட்பமுறைகள் உதவும் விதத்தினை **இரண்டு** காரணிகளைக் கொண்டு ஆராய்க. *(05 புள்ளிகள்)*

5. அட்டவணை - I இல் ஒக்கம்பிட்டியாவின் ஏப்ரல் மாத மழைவிழ்ச்சி பெறுமானங்கள் தரப்பட்டுள்ளன.

**ஒக்கம்பிட்டினாவின் ஏப்ரல் மாத மழைவிழ்ச்சி - *1980 - 2000* (மி.மீ)**

| வருடம் | மழைவீழ்ச்சி | வருடம் | மழைவீழ்ச்சி | வருடம் | மழைவீழ்ச்சி |
|---|---|---|---|---|---|
| 1980 | 279.8 | 1987 | 167.8 | 1994 | 231.4 |
| 1981 | 111.8 | 1988 | 140.2 | 1995 | 211.9 |
| 1982 | 179.3 | 1989 | 229.9 | 1996 | 305.9 |
| 1983 | 23.7 | 1990 | 75.1 | 1997 | 243.8 |
| 1984 | 181.8 | 1991 | 184.4 | 1998 | 20.5 |
| 1985 | 92.5 | 1992 | 83.4 | 1999 | 75.3 |
| 1986 | 134.5 | 1993 | 63.8 | 2000 | 111.6 |

**மூலம் :** இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம்.

அட்டவணை - I இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) அட்டவணை - I இல் தரப்பட்டுள்ள தரவுகளைக் காட்டுவதற்கு **பிரிக்கை வரைபடம்** ஒன்றினை வரைந்து அதில் **இடையம், மேற்காலணை, கீழ்க்காலணை** என்பவற்றினைக் குறித்துக் காட்டுக. *(08 புள்ளிகள்)*

(iii) *1990 - 2000* ஆண்டு காலப்பகுதிக்கான ஒக்கம்பட்டியாவின் ஏப்ரல் மாத மழைவீழ்ச்சிப் பாங்கு தொடர்பாக வரையிலிருந்து இனங்காணத்தக்க விடயங்களை ஆராய்க. *(04 புள்ளிகள்)*

(iv) புள்ளிவிபரவியலில் மையப்போக்கு அளவைகளில் ஒன்றான இடையத்தின் அனுகூலங்கள் **மூன்றினை** ஆராய்க. *(03 புள்ளிகள்)*

6. (i) விமானவொளிப் படங்கள் என்றால் என்ன? *(02 புள்ளிகள்)*

(ii) காவித் தரவுகள், பரவல் தரவுகள் என்பவற்றினை உதாரணங்களுடன் வேறுபடுத்தி விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iii) செய்முறைப் புவியியலில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட படமாக்கல் முறையின் **இரண்டு** பண்புகளை விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) இலங்கையில் நவீன படவரைகலையியல் நுட்பமுறைகளைப் பயன்படுத்துவதில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

✠✠✠



SCALE 1 : 50,000

**திருக்கோவில்வலயக்கல்விஅலுவலகம்நடாத்தும்**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2020**

# 01

புவியியல் - II

**மாதிரி வினாப்பத்திரம் - 01**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்**

✠ ஒவ்வொரு பகுதியிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினக்களுக்கு மாத்திரம் விடை தருக.

## பகுதி - I பௌதிகப் புவியியல்

*01.* (i) புவித் தகடுகளுடன் இணைந்து காணப்படும் **மூன்று** பிரதான எரிமலைச் செயற்பாட்டு வலயங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) பின்வரும் எரிமலைகள் அமைந்துள்ள நாடுகளைப் பெயரிடுக.

(a) பியூஜியாமா (b) ஹெக்லா (c) பினாட்டுப்போ
(d) கரகட்டோவா (e) விசுவியஸ் (f) எட்னா *(06 புள்ளிகள்)*

(iii) பிரதான எரிமலை நிலவுருவங்கள் **மூன்றினைப்** பெயரிட்டு அவற்றின் உருவாக்கச் செயன்முறையைப் பொருத்தமான விளக்கப்படங்களுடன் விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) எரிமலைச் செயற்பாட்டுடன் தொடர்புபட்ட **மூன்று** விளைவுகளைக் குறிப்பிட்டு அவை மானிட நடவடிக்கைகளின் மீது கொண்டுள்ள தாக்கங்களை உதரரணங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

*02.* (i) பாலைவனப் பகுதிகளில் இடம்பெறும் நிலவுருவங்களின் உருவாக்கச் செயன்முறைகள் **மூன்றினை** விளக்குக *(02 புள்ளிகள்)*

(ii) வறண்ட பிரதேசங்களில் காற்றினால் உருவாக்கப்படும் **மூன்று** அரித்தல் நிலவுருவங்களை வரைபடங்களுடன் விபரிக்குக?. *(06 புள்ளிகள்)*

(iii) வறண்ட பிரதேசங்களில் காற்றினால் உருவாக்கப்படும் **மூன்று** படிதல் நிலவுருவங்களை வரைபடங்களினுதவியுடன் விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) வறண்ட பிரதேசங்களில் நீரினால் உருவாக்கப்படும் **மூன்று** நிலவுருவங்களை குறிப்பிட்டு அவற்றின் உருவாக்கத்தினை வரைபடங்களினுதவியுடன் விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

*03.* (i) மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் **நான்கு** காரணிகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) மேலே (i) இல் உம்மால் பெயரிடப்பட்ட காரணிகளுள் **இரண்டினைத்** தெரிவு செய்து மண் உருவாக்கச் செயன்முறையில் அவை எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) மண்ணின் குறுக்கு வெட்டுமுகமொன்றின் புனையா வரைபடபடமொன்றினை வரைந்து அதன் மேற்பகுதியில் காணப்படும் **இரண்டு** படைகளின் முனைப்பான அம்சங்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் உலர் வலயத்தில் காணப்படும் **இரண்டு** பிரதான மண் பிரிவுகளின் பண்புகளைப் பரிசீலிக்குக. *(06 புள்ளிகள்)*

**04.** (i) **'ஈரநிலம்'** (Wetland) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) ஈரநிலத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் மூன்று சூழலியல் **நன்மைகளைச்** சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் ஈரநிலங்கள் எதிர்நோக்கும் **மூன்று** பிரதான அச்சுறுத்தல்களை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் **மூன்று** நடவடிக்கைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி - 11 மானிடப் புவியியல்

**05.** உலகின் ஒவ்வொரு வலயத்தினதும் நகர சனத்தொகைச் சதவீதம் பற்றிய தரவுகள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| முக்கிய வலயங்கள் | நகராக்க வீதம் | | | |
|---|---|---|---|---|
| | 1950 | 1975 | 2007 | 2025 |
| 1. ஆபிரிக்கா | 14.5 | 25.7 | 38.7 | 47.2 |
| 2. ஆசியா | 16.8 | 24.0 | 40.8 | 51.1 |
| 3. ஐரோப்பா | 51.2 | 65.7 | 72.2 | 16.2 |
| 4. இலத்தீன் அமெரிக்காவும் கரீபியனும் | 14.4 | 61.1 | 78.2 | 53.5 |
| 5. வட அமெரிக்கா | 68.9 | 73.8 | 81.3 | 85.7 |
| 6. ஓஷானியா | 62.0 | 71.5 | 70.5 | 71.9 |

*மூலம் : உலக வங்கி*

(i) மேலே தரப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 1950 - 2025 காலப்பகுதியில் உலக நகரமயமாதலின் முனைப்பான போக்குகள் **நான்கு** தருக. (02 புள்ளிகள்)

(ii) வளர்முக நாடுகளில் விரைவான நகராக்கத்திற்குப் பொறுப்பான **நான்கு** காரணிகளை விளக்குக? (06 புள்ளிகள்)

(iii) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகராக்கத்தின் காரணமாகத் தோற்றம் பெற்றுள்ள சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் கொழும்பு மாநகரப் பிரதேசத்தின் நகராக்கததில் இடம்பெற்றுள்ள **மூன்று** மாற்றங்களைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

**06.** (i) **"பசுமைப் புரட்சி"** என்பது எதனைக் கருதுகின்றது என்பதனைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) உலகின் உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் பசுமைப் புரட்சியுடன் தொடர்புபட்ட **நான்கு** காரணிகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) பசுமைப் புரட்சியினால் ஏற்பட்ட **இரண்டு** சமூக - பொருளாதார விளைவுகளையும், **இரண்டு** சூழலியல் விளைவுகளையும் ஆராய்க *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் விவசாயம் நவீனமயப்படுத்தப்பட்டமையால் ஏற்படும் மூன்று விளைவுகளை குறிப்பிட்டு விளக்குக? *(06 புள்ளிகள்)*

**07.** (i) பல்தேசிய கூட்டுத்தாபனம் என்பதை வரையறை செய்க. *(02 புள்ளிகள்)*

(ii) உலகின் **நான்கு** பல்தேசிய கம்பனிகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) பல்தேசிய நிறுவனங்களுடன் இணைந்து காணப்படும் **நான்கு** பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

(iv) வெளிநாட்டு நேரடி முதலீடுகளை அதிகரிப்பதற்கு இலங்கையினால் மேற்கொள்ளக் கூடிய **நான்கு** நடவடிக்கைகளை விபரிக்குக. *(08 புள்ளிகள்)*

**08.** (i) (அ) இலங்கையின் சுற்றுலா வலயங்கள் **நான்கினைப்** பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ஆ) இலங்கைக்கு அதிக எண்ணிக்கையில் வரும் சுற்றுலாப் பயணிகளின் நாடுகள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையின் பொருளாதார விருத்திக்கு சுற்றுலாக் கைத்தொழில் எவ்வாறு பங்களிக்கின்றது என்பதற்கு **நான்கு** உதாரணங்னளைக் குறிப்பிட்டு விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் எதிர்கொள்ளும் சமூக - கலாச்சாரத் தாக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலினை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படடுவரும் **இரண்டு** நடவடிக்கைகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

✠✠✠